பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 24 செவ்வாய்க்கிழமை 08.07.2025 கதிர் 241

### இது ரகசியம் அல்ல!

பிள்ளையானின் சகாக்களான இனியபாரதியும் அவரது சகாவும் சாரதியுமான சசீதரன் தவசீலனும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டமைதெரிந்த ☞ 2

## லஞ்சம் பெற முற்பட்ட குற்றச்சாட்டில் இறைவரி திணைக்கள அதிகாரி கைது

வர்த்தகர் ஒருவரிடம் 50 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற முற்பட்ட குற்றச்சாட்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நகரக் கிளையின்பிரதி ஆணையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் நேற்று பிற்பகல் இலஞ்சஊழல்விசாரணைஆணைக்குழுவின்அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின்

வைத்து சந்தேக நபர் நேற்று பிற்பகல் கைது செய்யப்பட்டதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

50 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற முற்பட்ட குற்றச்சாட்டிலே அந்த திணைக்களத்தின் கிளைப் பிரதி ஆணையாளர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு தெமட்டகொட ,கொலன்னாவை பிரதேசத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் குறித்த வர்த்தகருக்கு சொந்தமான நிறுவனத்துக்கான வருடாந்த பரிசோதனை அறிக்கையை வெளியிடுவதற்காக சந்தேக நபர் ஒரு இலட்சம் ரூபா இலஞ்சமாக கோரியுள்ளார்.

இருப்பினும் 50 ஆயிரம் ரூபாவை மாத்திரம் ☞ 2

## மொழி உரிமையை மதிக்காதது சிறு தவறல்ல ஏட்டில் உள்ளவைகள் யதார்த்தமாகவேண்டும்

### அமைச்சர் ஹர்ஷன நாயணக்கார தெரிவிப்பு

எமது நாட்டில் மொழி உரிமைக்கு மதிப்பளிப்பதற்கு முடியாமல்போனமை சிறிய தவறு அல்ல என்பதை நாங்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இந்த படிப்பினையை சரியாக கற்றுக்கொள்ளாவிட்டால் வரலாறு மீண்டும் வருவது நிச்சயமாகும். அதனால் மொழிஉரிமைகள் தொடர்பாக சட்ட அங்கீகாரம் மட்டும் போதாது. ஏட்டில் உள்ள உரிமைகள் மக்களின் வாழ்க்கையில் யதார்த்தமாக மாற வேண்டும்எனநீதிமற்றும்தேசியஒருமைப்பாட்டு அமைச்சர்ஹர்ஷனநாணயக்கார தெரிவித்தார்.

அரசகரும மொழிகள் வாரத்தின் இறுதிநாள் நிகழ்வு நேற்று இலங்கை மன்ற கல்லூரியில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், மொழி என்பது ஒரு தொழில்நுட்ப விடயம் அல்ல என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அதேபோன்று தொடர்பு சாதனத்தை விடஅதிகமானதெளிவைமொழிமூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. மொழி என்பது ஒருநபரின் அடையாளத்தின் இதயம். அது நினைவின் குரலும் கூட. மரியாதையின் தாளம். ☞ 2

## குறைந்த வருவாய்பெறும் நடுத்தர நாடே இலங்கை

### உலக வங்கியின் அறிக்கை தெரிவிப்பு

உலகவங்கியின்நாடுகளுக்கான வகைப்படுத்தல்அறிக்கைக்குஅமைய இலங்கை தொடர்ந்தும் குறைந்த -நடுத்தர வருமானம் பெறும் நாடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் ஜூலை முதலாம் திகதி முதல் 2026 ஆம் ஆண்டின் ஜூன் மாதம் வரையான காலப்பகுதிக்காக உலக வங்கியின் நாடுகளுக்கான ☞ 2

# மேலும் 5 மனித எலும்புக்கூடுகள் செம்மணியில் நேற்று கண்டுபிடிப்பு






யாழ்ப்பாணம்செம்மணிசித்துப்பாத்தி இந்து மயானத்தில் தொடர்ச்சியாக அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அங்கு அடையாளம் காணப்படும் மற்றும் மீட்கப்படும் எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றது. அந்த வகையில் ஜூலை 07 திங்கட்கிழமை மேலும் 5 எலும்புக்கூடுகள்புதிதாகஅடையாளம் காணப்பட்டுள்ளன. இதனுடன் இதுவரையில் 52 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன் 47 எலும்புக்கூடுகள் ☞ 2

## தமிழர்களுக்கு எதிரான மீறல்கள் மீதான விசாரணையின் அடித்தளமே செம்மணி

### சிறீதரன், கஜேந்திரகுமார் தெரிவிப்பு

செம்மணி மனிதப் புதைகுழியையோ அல்லது 2009 இல் இறுதிக்கட்ட போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்களையோ மாத்திரம் தமிழர்களுக்கு எதிரான மீறல்களாகக் கூறமுடியாது. மாறாக 1948 இல் நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து தமிழர்களுக்கு எதிராக மீறல்கள் தொடர்ந்து பதிவாகிவருகின்றன. தற்போது எதிர்பாராதவிதமாகக் கண்டறியப்பட்டிருக்கும் செம்மணிமனிதப்புதைகுழியைதமிழர்களுக்கு எதிரான சகலவிதமான மீறல்கள் தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுப்பதற்கான அடித்தளமாகவே பார்க்கவேண்டும் என நாடாளுமன்றஉறுப்பினர்களானசிறீதரன்மற்றும் கஜேந்திரகுமார் ஆகியோர் தெரிவித்தனர்.

செம்மணி சித்துபாத்தியில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழி தற்போது வட, கிழக்கில் மாத்திரமன்றிதென்னிலங்கையிலும்மிகமுக்கிய பேசுபொருளாக மாறியிருக்கிறது. இந்நிலையில் 2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்ட போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் உள்ளடங்கலாக தமிழர்களுக்குஎதிரானமீறல்கள்தொடர்பில் கவனம்செலுத்தாமல், செம்மணி ☞ 2

## இலங்கைக்கு ஆதரவாக வோல்கர் டர்க் செயற்பட்டால் நம்பிக்கை சீர்குலையும்

### கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் செப்டெம்பர்மாதக் கூட்டத் தொடர் இலங்கை அரசுக்குச் சாதகமானதாக அமையும் என்ற அமைச்சர் விஜித்த ஹேரத்தின் கருத்தை உண்மையாக்கும்வகையில் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் செயற்படுவாராயின், அது ஐ.நா மனித உரிமைகள்உயர்ஸ்தானிகர்அலுவலகத்தின் மீது பாதிக்கப்பட்ட தரப்பினர் கொண்டிருக்கும் நம்பிக்கையைமுற்றுமுழுதாக சீர்குலைக்கும் என தமிழ்த் தேசியமக்கள்முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எச்சரித் துள்ளா

அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் கடந்த ☞ 2

## ஹர்ஷனவுக்குப் பதில் நிஷாந்த

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான கலாநிதி ஹர்ஷண சூரியப்பெருமவின் ராஜினாமாவைத் தொடர்ந்து ஏற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்தை நிரப்ப நிஷாந்த ஜயவீரவின் பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு இந்த வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் செயலாளர் இந்தப் பெயரை தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பியுள்ளார். அதன்படி, வெற்றிடமாக உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு நிஷாந்த ஜயவீரவின் பெயரை வர்த்தமானியில் ☞ 2

## வாகன இறக்குமதியை கட்டுப்படுத்தும் எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை

### ஆளும்தரப்பு தெளிவுபடுத்தல்

வாகன இறக்குமதியை கட்டுப்படுத்த எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை என இலங்கை மத்திய வங்கி வலியுறுத்தியுள்ளது.

சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தபடி, வாகன இறக்குமதியை கட்டுப்படுத்துவது தொடர்பாக இலங்கை மத்திய வங்கிக்கும் மற்றும் திறைசேரிக்கும் இடையில் எந்தவொரு கடிதப் பரிமாற்றமோஅல்லதுதொடர்பாடலோ இடம்பெறவில்லை என்று மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறினார்.

நாட்டின் பொருளாதாரம் நெருக்கடியான நிலையில் இருந்து மீண்டு, இயல்பு நிலைக்குத் திரும்பி வருவதைத் தொடர்ந்து, ☞ 3

## இனி இது .....

செய்தி. துணை ஆயுதப் படையாக அதாவது ஒட்டுக்குழுவாக பிள்ளையான் குழு செயற்பட்டபோது அவர்கள் செய்த பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபடுத்தியே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார். ஒருவழியில் பார்த்தால் அவர்கள் ஈடுபட்ட போர்க் குற்றச்சாட்டுக்கள், மனித உரிமைகள் மீறல்கள், மானுடத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பிலேயே அவர்கள் கைது செய்ப்பட்டுள்ளார். போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தமிழர்களை விசாரணை செய்வதற்கு முடிகின்ற ஆளும்தரப்பால் அதே குற்றச்சாட்டுக்களுக்கு எதிரான விசாரணைகளை சிங்களப் படையினருக்கு எதிராக முன்னெடுக்கமுடியவில்லை. இனியபாரதி மாதிரியானவர்கள் புரிந்த குற்றங்களும் தமிழர்களுக்கு எதிரானவைதான் என்பதால், அவர்களின் கைதுகள் குற்றங்களுக்கு எதிரான ஆளும்தரப்பின் நடவடிக்கை என்கிற வகையில் நோக்கப்பட்டாலும், கடைசியில் ஐ.நா. போன்ற சபைகளில் அறிக்கையிடல்கள் வரும்போது தாம் போர்க் குற்றங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்ததாக ஆளும்தரப்பு தனது அறிக்கையைத் திரிக்கும்.

இப்போது கைது செய்யப்பட்டிருக்கும் இனியபாரதி மற்றும் அவரது சகா மீது சுமத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களானவன:

2005.02.07: பொலன்னறுவைவெலிகந்த புல்லேயரடியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு உட்பட 6 பேர் படுகொலை.

2007.05.09: சிந்துஜன் என்ற ஜோன்சன் ஜெயகாந்தன் படுகொலை.

2007.06.28: திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் தில்லைநாயகம் உதயகுமார் படுகொலை.

2007.07.27: திருக்கோவிலைச் சேர்ந்த சிவனடிகன் அழகுராசா கடத்தல்.

2008.04.20: கல்முனை பாண்டிருப்பு பகுதியில் கிராம சேவை உத்தியோகத்தர்கள் கந்தையா நாகராசா, கனகரத்தினம் ஆனந்தி படுகொலை.

2008.09.25: திருக்கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த திருமால் திருச்செல்வம் கடத்தப்பட்டு படுகொலை.

2008.11.21: விநாயகபுரத்தைச் சேர்ந்த இராசையா கோபுலன் மற்றும் அவரது தாயார் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மேலும், 2022.12.21 அக்கரைப்பற்று நீதிமன்ற தீ வைப்பு சம்பவத்தில் இவர்களின் ஈடுபாடு குறித்து விசாரணை நடைபெறுகிறது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைய அறிக்கைகளில் இனியபாரதி, கொலைகள், கடத்தல்கள், சித்திரவதை கூடங்கள் நடத்துதல், மற்றும் துப்பாக்கி பயன்பாட்டில் ஈடுபட்டவராக பெயரிடப்பட்டுள்ளார்.

................................................

கஜேந்திரகுமாருக்கு புற்றுநோய் ஏற்பட்டதிலிருந்து அவருக்கு கட்சிகளின் ஒற்றுமை குறித்த ஞானம் அடிக்கடி வருகின்றது. அதற்கு முன்பு வரையில் அவர் ஒட்டுக்குழுக்கள் என்றும் இலங்கை அரசின் முகவர்கள் என்றும் சாட்டியவர்களுடன் இப்போது கூட்டுச் சேரவேண்டும் என்பதில் அவர் தொடர்ந்து கடுமையாக முயற்சிக்கிறார். இது தொடர்பில் அவர் ஏற்கனவே எடுத்த முயற்சிகள் வெற்றிபெறாத நிலையில் மீண்டும் அவர் அத்தகைய முயற்சியொன்றில் இறங்கியிருக்கிறார்.

பொறுப்புக்கூறல் மற்றும் அரசியல் தீர்வு ஆகிய விடயங்களில் பொதுவேலைத் திட்டமொன்றின்கீழ் ஒன்றிணைந்து செயலாற்றுவது குறித்து இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி உள்ளிட்ட தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளுடனும், தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கிவரும் சிவில்சமூகப்பிரதிநிதிகளுடனும் பேச்சு நடாத்தவிருப்பதாக இப்போது அவர் தெரிவித்திருக்கிறார்.

முதலில் அரசியல் தீர்வு, அதாவது புதிய அரசமைப்பு உருவாக்கத்தை முன்வைத்த தீர்வு குறித்து நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களைக்கொண்டுள்ள அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைக்கப்போகின்றேன் என்று அறிவித்தபடி ஒரு முயற்சியைத் தொடங்கினார். ஆனால், புதிய அரசமைப்பு முயற்சிகள் தொடங்கும்போது அதைப் பற்றிப் பார்க்கலாம் என்று தமிழ் அரசுக் கட்சி அவரது முகத்திலடித்தாற்போன்று பதிலளித்ததும் தனது ஒற்றுமையை முயற்சியை குலைத்துவிட்டது என்று குய்யோ முறையோ என்று குரல் எழுப்பித் திரிந்தார்.

இப்போது, செம்மணி விவகாரம் பெரியளவில் மேற்கிளம்பி வருவதையொட்டி, அரசியல்தீர்வோடுதிடீரென்று பொறுப்புக்கூறல் விவகாரத்தையும் உள்ளடக்கி எல்லாக் கட்சிகளுடனும் பேசப் போகிறார் என்று தெரிவித்திருக்கிறார். பொறுப்புக்கூறல் விவகாரத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செம்டெம்பர் மாத அமர்வு மிக முக்கியமானது என்று தெரிவித்திருக்கும் அவர், அதற்கு முன்னர் அது பற்றிப் பேசவேண்டும் என்பதால், அதனுடன் அரசியல் தீர்வு என்பதையும் சேர்த்து ஒரு பேச்சுக்கு முயற்சிக்கின்றார்.

தமிழ்அரசுக்கட்சியைத்தனது பொறிக்குள் விழுத்தும் அவரது முயற்சி, தன்னால் தனித்து நின்று தமிழ் மக்களின் ஆதரவை வெற்றிகொள்ள முடியாது என்று தீர்மானித்தது முதல் தொடங்கியது. ஆனால், அந்தப் பொறிக்குள் சிக்கவேமாட்டேன் என்று திமிறித் திரியும் தமிழ் அரசுக் கட்சி. இப்போது பொறுப்புக்கூறலை முன்வைத்து கஜேந்திரகுமார் விரித்துள்ள வலையில் விழுகிறதா என்று பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மேலும் 5 மனித....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் நீதிவான் ஆனந்தராஜா முன்னிலையில், தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ்சோமதேவா அவர்களின் குழுவின் பங்கேற்போடு இந்த அகழ்வுப் பணிகள் இன்றும் முன்னெடுக்கப்பட்டது.

குறித்தபுதைகுழிவிவகாரமானதுசர்வதேச ரீதியில் மிகப்பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில் தென்னிந்திய நடிகர்கள்மற்றும்இயக்குநர்கள்குறித்தமனிதப் புதைகுழிக்கு எதிராகக் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரத்துடன் மாத்திரம் ஆளும்தரப்பு அதன் நீதி விசாரணை மற்றும் பொறப்புக்கூறல் செயன்முறையைநிறுத்திக்கொள்ளுமோஎன்ற கரிசனை பலர் மத்தியிலும் எழுந்திருக்கிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பான உண்மைகள் கண்டறியப்பட்டு நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிசெய்யப்படவேண்டிய அதேவேளை, தமிழர்களுக்கு எதிரான மீறல்கள் பரந்துபட்ட அடிப்படையில் அணுகப்படவேண்டியதன் அவசியம் குறித்து தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

அதன்படி இதுகுறித்து கருத்து வெளியிட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் சிவஞானம் சிறிதரன், ‘அண்மையில் அடையாளங்காணப்பட்ட செம்மணி மனிதப்புதைகுழியும் அதில் கண்டறியப்பட்ட சிறுவர்கள் உள்ளிட்டோரின் எலும்புக்கூடுகள் மற்றும் புத்தகப்பை, காலணி, பொம்மை என்பனவும்தற்போதுஉலகத்தின்மனசாட்சியை உலுக்கிக்கொண்டிருக்கின்றன. செம்மணியில் அடையாளங்காணப்படுபவைதமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலையின் முக்கிய சாட்சியங்களாகும். இருப்பினும் அதுகுறித்த உண்மைகளை ‘கற்பனையில் பேசுகிறார்கள்‘ என்று கூறி சில அரசியல் தரப்புக்கள் புறந்தள்ள முற்படுகின்றன‘ எனச் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை செம்மணியைப் போன்று மன்னார், கொக்குத்தொடுவாய், திருக்கேதீஸ்வரம் போன்ற இடங்களில் கண்டறியப்பட்ட மனிதப்புதைகுழிகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவேண்டும் எனவும், அவை பற்றிய உண்மைகள் மழுங்கடிக்கப்படக்கூடாது எனவும் வலியுறுத்திய சிறிதரன், 2009 ஆம் ஆண்டு முடிவுக்குக்கொண்டுவரப்பட்ட இறுதிக்கட்ட போரின்போது சுமார் 100,000 க்கும் மேற்பட்டோர் காணாமலாக்கப்பட்டும், கொல்லப்பட்டும் இருப்பதாக மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் இராயப்பு ஜோஸப்பினால்வழங்கப்பட்டசாட்சியங்களுக்கு அமைவாக இவ்விடயம் பரந்துபட்ட அடிப்படையில் நோக்கப்படவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

அதேபோன்றுசெம்மணிமனிதப்புதைகுழி விவகாரமானது 1948 ஆம் ஆண்டு நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து தமிழர்களுக்கு எதிராகநிகழ்த்தப்பட்டுவரும்மீறல்கள்தொடர்பில் பரந்துபட்டவிசாரணைகள்முன்னெடுக்கப்பட்டு, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன நிலைநாட்டப்படுவதற்கும் அதனூடாக தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வழங்கப்படுவதற்குமான அடிப்படையாக நோக்கப்படவேண்டும் என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டினார்.

‘செம்மணி மனிதப்புதைகுழியையோ அல்லது 2009 இல் இறுதிக்கட்ட போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்களையோ மாத்திரம் தமிழர்களுக்கு எதிரான மீறல்களாகக் கூறமுடியாது. மாறாக 1948 ஆம் ஆண்டு நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து தமிழர்களுக்கு எதிராக மீறல்கள் தொடர்ந்து பதிவாகிவருவதுடன், அதன் விளைவாகவே ஆயுதப்போராட்டம்எழுச்சியடைந்தது. ஆனால் யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதன் பின்னர், இறுதிக்கட்டப்போரின்போது மாத்திரமேமீறல்கள்இடம்பெற்றதைப்போன்று, அதுகுறித்து மட்டுமே பேசப்படுகின்றது.

‘போர் முடிவுக்குகொண்டுவரப்பட்டதன் பின்னர், தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட சகல மீறல்கள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என நாம் வலியுறுத்தியிருந்தோம். இருப்பினும் அக்காலப்பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் தலைமைகள் அதனை வலியுறுத்தாதன் விளைவாகவும், உள்ளக விசாரணையை முன்னிலைப்படுத்தக்கூடிய பொறிமுறைகள் நிறுவப்பட்டதன் காரணமாகவும் பரந்துபட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை.

‘இவ்வாறானதொருபின்னணியில்தற்போது எதிர்பாராதவிதமாகக் கண்டறியப்பட்டிருக்கும் செம்மணிமனிதப்புதைகுழியைதமிழர்களுக்கு எதிரான சகலவிதமான மீறல்கள் தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுப்பதற்கான அடித்தளமாகவே பார்க்கவேண்டும். அதனூடாகமாத்திரமேதமிழர்களுக்குஎதிரான போர்க்குற்றங்கள் மற்றும் மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்யவும், அரசிடமிருந்து தமிழர்களின் இருப்பைப் பாதுகாக்கக்கூடியவாறான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்‘ எனவும் கஜேந்திரகுமார் தெளிவுபடுத்தினார்.

## மொழி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிந்தனையின் கட்டமைப்பு. எமது நாட்டை உற்றுநோக்கும்போது நீதி, நல்லிணக்கம் மற்றும் அரசின் தூய்மை தன்மையின் லிட்மஸ் பரிசோதனையாக மொழியை அறிமுகப்படுத்தலாம்.

ஒருவருக்கு தனக்கு நெருக்கமான மொழியில் கருத்து தெரிவிக்க அல்லது செவிசாய்ப்பதற்கு இருக்கும் சந்தர்ப்பம் இல்லை என்றால், அந்த சமூகத்தில் மனிதாபிமானம் நிராகரிக்கப்படுகிறது என்றே அதன் மூலம் தெரிகிறது. அதனாலே அடிப்படை தேவைகளை பெற்றுக்கொடுப்பதன் மூலம் அல்லது போராட்ட காஷங்கள் ஊடாக மாத்திரம் தேசிய ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்த முடியாமல் இருக்கிறது. மொழிக் கொள்கையை செயற்படுத்துவதன் மூலமே இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படுகிறது.

எமது வரலாற்றை திரும்பிப் பார்ப்போமானால், மொழி உரிமைக்கு மதிப்பளிப்பதற்கு முடியாமல்போனமை சிறிய தவறு அல்ல என்பதை நாங்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. அது பாரிய அநீதியை ஏற்படுத்தியது மட்டுமல்லாது, இனங்களுக்கிடையில் நம்பிக்கையின்மை, ஐக்கியமின்மை மற்றும் இறுதியில் ஆயுதம் தாங்கிய மோதலுக்கு செல்வதற்கும் காரணமாயது. இந்த படிப்பினையை சரியாக கற்றுக்கொள்ளாவிட்டால் வரலாறு மீண்டும் வருவது நிச்சயமாகும். அதனால் அதனை நாங்கள் மீண்டும் செய்யக்கூடாத சிறந்த பாடமாக, ஆழமாக புரிந்துகொள்ள வேண்டும்.

சமத்துவம் இல்லாமல் நீடித்த அமைதி இருக்க முடியாது. அரசு தனது மக்களின் மொழியை மதிக்காவிட்டால் சமத்துவம் ஏற்படப்போவதில்லை. நாங்கள் அதனை புரிந்துகொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறோம். எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் இருந்து அனைத்து கிராம சேவகர் பிரிவிலும் இரண்டு மொழிகளிலும் விண்ணப்பங்களை விநியோகிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.

இலங்கை அரசியலமைப்பில் சிங்களம் மற்றும் தமிழ் அரசகரும மொழியாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 13ஆம் திருத்தம் மற்றும் அரசகருமமொழிகள் ஆணைக்குழுசட்டத்தின்மூலம்பலமானதொரு சட்ட ஏற்பாடு ஒன்றை தயாரித்திருக்கிறோம். எவ்வாறு இருந்தாலும், மொழி உரிமைகள் தொடர்பாக சட்ட அங்கீகாரம் மட்டும் போதாது. ஏட்டில் உள்ள உரிமைகள் மக்களின் வாழ்க்கையில் யதார்த்தமாக மாற வேண்டும் என்றார்.

## லஞ்சம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரியுள்ள சந்தேக நபர் அதில் 42 ஆயிரம் ரூபாவை கடந்த 3 ஆம் திகதி இலஞ்சமாக பெற்றுக்கொண்டுள்ளார்.

இதற்கமைய மிகுதி 8 ஆயிரம் ரூபா பணத்தை இன்று பெற்றுக் கொள்ள முற்பட்ட போதே அவர் கைது செய்யப்பட்டதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

## குறைந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகைப்படுத்தல் அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைக்கு அமைய இந்தியா உள்ளிட்ட தெற்காசியாவின் 06 நாடுகள் குறைந்த - நடுத்தர வருமானம் பெறும் நாடுகளுக்கான பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. தெற்காசிய நாடுகளில் ஆப்கானிஸ்தான் மாத்திரமே குறைந்த வருமானம் பெறும் நாடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

2026 நிதியாண்டிற்கமைய 1,136 அமெரிக்க டொலரில் இருந்து 4,495 அமெரிக்க டொலர் வரையான தனிநபர் மொத்த தேசிய உற்பத்தியைக்கொண்டுள்ள நாடுகள் குறைந்த - நடுத்தர வருமானம் பெறும் நாடுகளாக பெயரிடப்படுகின்றன.

குறைந்த வருமானம் பெறும் நாடுகள், குறைந்த - நடுத்தர வருமானம் பெறும் நாடுகள், உயர் - நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் மற்றும் உயர் வருமானம் பெறும் நாடுகள் ஆகிய பிரிவுகளில் நாடுகள் வகைப்படுத்தப்படுகின்றன.

முந்தைய ஆண்டில் அமெரிக்க டொலரினூடாக வெள ப்படுத்தப்பட்டுள்ள அட்லஸ் முறைமையைப் பயன்படுத்தி கணக்கிடப்படும் நாட்டின் தனிநபர் மொத்த தேசியஉற்பத்தியைஅடிப்படையாகக்கொண்டு இந்த வகைப்படுத்தல் தயாரிக்கப்படுகின்றது.

உலகவங்கியின்இந்தவகைப்படுத்தலானது நாடொன்றின் அபிவிருத்தி செயற்பாடுகளைப் பிரதிபலிக்கும்முக்கிய அளவீட்டுகாரணியாகும்.

அத்துடன் இந்த வகைப்படுத்தல் தரவுகள், அபிவிருத்தி நிதி உதவிகள் மற்றும் கடன் நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் முக்கியமான காரணியாக அமையுமெனஉலகவங்கிசுட்டிக்காட்டியுள்ளது.

## ஹர்ஷனவுக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

கலாநிதிஹர்ஷணசூரியப்பெருமநிதிமற்றும் திட்டமிடல்பிரதிஅமைச்சராகப்பணியாற்றினார், பின்னர்தனதுபதவியிலிருந்தும்நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் ராஜினாமா செய்தார்.

நிதி அமைச்சின் செயலாளர் பதவியை ஏற்றுக்கொள்வதற்காக அவர் இவ்வாறு ராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாரம் சிங்கள செய்திச்சேவை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில், நாட்டின் உள்ளக விவகாரங்களில் சர்வதேச தலையீடுகள் அவசியமற்றவை எனவும், அரசியலமைப்பு, சட்டம் மற்றும் நீதிமன்றக் கட்டமைப்புக்கள் ஊடாகபல்வேறுஉள்ளகப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியும்எனவும்தெரிவித்திருந்தார். அதுமாத்திரமன்றி ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் அண்மைய இலங்கை விஜயமும், அவரது அவதானிப்புக்களும் எதிர்வரும் செப்டெம்பர்மாதக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு சாதகமாக அமையும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம், உயர்ஆணையர் வோல்கர் டர்க்கின் இலங்கை வருகை அரசுக்குச் சாதகமாக அமையும் என்ற அமைச்சர் விஜித்த ஹேரத்தின் கருத்து ஐ.நா மனித உரிமைகள் உயர்ஆணையர் என்ற பதவியையும், அக்கட்டமைப்பையும் கேள்விக்குரியதாக

தொடர்ச்சி 3ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

## இலங்கைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றியிருப்பதாக சுட்டிக்காட்டினார்.

''எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் 60ஆவது ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடருக்கு முன்பதாக நாட்டுக்கு வருகைதரவேண்டாம் எனவலியுறுத்திநாடளாவியரீதியில்நூற்றுக்கும் மேற்பட்ட செயற்பாட்டாரகள் இணைந்து உயர்ஆணையர் அலுவலகத்துக்குக் கடிதம் அனுப்பிவைத்திருந்தனர். அதற்கு முன்பதாக வருகைதரும் பட்சத்தில் செப்டெம்பர் மாதக் கூட்டத்தொடரில் உயர்ஆணையரால் வெளியிடப்படவிருக்கும் அறிக்கையின் காத்திரத்தன்மையைவலுவிழக்கச்செய்வதற்கு ஏதுவான நடவடிக்கைகள் ஆளும்தரப்பினால் முன்னெடுக்கப்படும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

'இருப்பினும் அக்கரிசனைகளுக்கு மத்தியில், அவற்றை மீறியே உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் நாட்டுக்கு வருகைதந்தார். இவ்வாறானதொருபின்னணியில்பாதிக்கப்பட்ட தரப்பினரின் கரிசனையைப் புரிந்துகொண்டு, அதற்கேற்றவாறு உயர்ஆணையர் செயற்படாவிடின், ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஆணையர் அலுவலகத்தின் மீதான நம்பகத்தன்மைமுற்றுமுழுதாகஇழக்கப்படும்" எனவும் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

## வாகன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

5 ஆண்டுகளுக்குப் பின்னர், கடந்த பெப்ரவரி முதலாம் திகதி முதல் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக வாகன இறக்குமதி அனுமதிக்கப்பட்டது.

அதன்படி, 2025 பெப்ரவரி முதல் ஜூன் மாதம் வரை சுமார் 18,000 மோட்டார் வாகனங்கள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இதில், குறித்த காலப்பகுதியில் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் 13,614 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, கடந்த பெப்ரவரி முதல் கடந்த 5 மாதங்களில் வாகன இறக்குமதிக்காக 800 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு கடன் கடிதங்கள் திறக்கப்பட்டுள்ளன.

இதில், இதுவரை 450 மில்லியன் அமெரிக்கடொலர்கள்மதிப்பிலானவாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான பின்னணியில், சில ஊடகங்கள்நேற்று(07),வாகனஇறக்குமதியை கட்டுப்படுத்துவது தொடர்பில் மத்திய வங்கி திறைசேரிக்கு எச்சரிக்கைகளை விடுத்துள்ளதாக செய்தி வெளியிட்டிருந்தன.

இது தொடர்பாக இலங்கை மத்திய வங்கியிடம் கேட்டபோது, திறைசேரிக்கும் மத்திய வங்கிக்கும் இடையில் வாகன இறக்குமதி தொடர்பாக எந்தவொரு கடிதப் பரிமாற்றமோ அல்லது தொடர்பாடலோ இடம்பெறவில்லை என மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும், வாகன இறக்குமதியை கட்டுப்படுத்துவதற்கு எந்தவொரு வழிகாட்டுதலோ அல்லது பரிந்துரையோ இலங்கை மத்திய வங்கியால் திறைசேரிக்கு வழங்கப்படவில்லை என்று அந்த சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார்.

வாகன இறக்குமதியின் போது, மத்திய வங்கியின் வெளிநாட்டு இருப்புகளுக்கு (foreign reserves) எந்தவொரு தாக்கமும் ஏற்படாது என்றும், வாகன இறக்குமதி நாட்டின் வணிக வங்கி முறைமையில் உள்ள டொலர் இருப்புகளில் இருந்து மேற்கொள்ளப்படுவதாகவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

தற்போது, இலங்கை மத்திய வங்கியிடம் 6.3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டு கையிருப்பு உள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

பொருளாதார ஆய்வாளர்கள், வாகன இறக்குமதியின் போது மத்திய வங்கியின் டொலர் இருப்புகளுக்கு எந்தவொரு தாக்கமும் இல்லை என்று சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறான பின்னணியில், நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் சந்தை மதிப்பு குறித்து அத தெரண ஆய்வு மேற்கொண்டது.

Suzuki Wagon R FX-S: ஜப்பானில் 36 இலட்சம் ரூபாவாக உள்ள இந்த வாகனம், இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும்போது 38 இலட்சம் ரூபா வரி விதிக்கப்படுகிறது. இதனால், இறக்குமதி மதிப்பு 74 இலட்சம் ரூபாவாக இருந்தாலும், இது இலங்கையில் சுமார் 86 இலட்சம் ரூபாவுக்கு விற்பனையாகிறது.

Toyota Raize 1200cc Hybrid: ஜப்பானில் 74 இலட்சம் ரூபாவாக உள்ள இந்த வாகனத்திற்கு இலங்கையில் 64 இலட்சம் ரூபா வரி விதிக்கப்படுகிறது. இதனால், இறக்குமதி மதிப்பு 138 இலட்சம் ரூபாவாக இருந்தாலும், இது சுமார் 165 இலட்சம் ரூபாவுக்கு விற்பனையாகிறது.

Honda VEZEL X: ஜப்பானில் 88 இலட்சம்ரூபாவாகஉள்ளஇந்தவாகனத்திற்கு 90 இலட்சம் ரூபா வரி விதிக்கப்படுகிறது. இதனால், இறக்குமதி மதிப்பு 178 இலட்சம் ரூபாவாக இருந்தாலும், இது சுமார் 210 இலட்சம் ரூபாவுக்கு விற்பனையாகிறது.

Toyota Hilux GR Sport: தாய்லாந்தில் 150 இலட்சம் ரூபாவாக உள்ள இந்த வாகனத்திற்கு 130 இலட்சம் ரூபா வரி விதிக்கப்படுகிறது. இதனால், இறக்குமதி மதிப்பு 285 இலட்சம் ரூபாவாக இருந்தாலும், இது சுமார் 320 இலட்சம் ரூபாவுக்கு விற்பனையாகிறது.

Toyota Yaris Cross: ஜப்பானில் 65 இலட்சம்ரூபாவாகஉள்ளஇந்தவாகனத்திற்கு 89 இலட்சம் ரூபா வரி விதிக்கப்படுகிறது. இதனால், இறக்குமதி மதிப்பு 154 இலட்சம் ரூபாவாக இருந்தாலும், இது சுமார் 195 இலட்சம் ரூபாவுக்கு விற்பனையாகிறது.

Toyota Land Cruiser Prado 250: உற்பத்தி நாட்டில் 180 இலட்சம் ரூபாவாக உள்ள இந்த வாகனத்திற்கு இலங்கையில் 400 இலட்சம் ரூபா வரி விதிக்கப்படுகிறது. இதனால், இறக்குமதி மதிப்பு 585 இலட்சம் ரூபாவாக இருந்தாலும், இது சுமார் 650 இலட்சம் ரூபாவுக்கு விற்பனையாகிறது.

இதற்கிடையில், இறக்குமதி சட்டங்களையும் விதிமுறைகளையும் மீறி, வாகன இறக்குமதியாளர்களால் சுமார் 300 வாகனங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டு, ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள்தெரிவிக்கின்றன. இந்தவாகனங்கள் தொடர்பாக எடுக்கப்படவேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து, நிதி அமைச்சு இலங்கை சுங்கத் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து முடிவெடுக்கவுள்ளது.




காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

கடந்தவாரம்நடைபெற்றஒருமுக்கியநடவடிக்கை:முன்னாள் கிழக்கு மாகாண உறுப்பினரான 'இனியபாரதி'என்றும் அழைக்கப்படும் கே. புஷ்பகுமார் மற்றும் அவரது நெருங்கிய தோழர் ஒருவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இருவரும் 2006 முதல் 2008 வரை கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற பல கொடூர குற்றச்சம்பவங்களில் தொடர்புடையவர்கள் என்றுதான் இந்த கைது நடந்துள்ளது. குறிப்பாக, கடத்தல், கொலை, தூண்டல், ஆயுதக் கடத்தல், மனித உரிமை மீறல் போன்ற குற்றச்சம்பவங்களில் இவர்கள் மீது பல ஆண்டுகளாகவே புகார்கள் இருந்தன. ஆனால் போதுமான ஆதாரங்கள் இல்லாததால் அவை வழக்குகளில் மாறுவதற்குச் சாத்தியம் ஏற்படவில்லை.

இன்று, பெரும்பாலும் மறக்கப்பட்டிருந்த (cold case) வழக்குகளை குற்றப் புலனாய்வுத்துறை மீண்டும் திறந்து விசாரிக்கத்தொடங்கியுள்ளதுஎன்பதுவரவேற்கத்தக்கதொரு முன்னேற்றம். சமீப காலமாக இலங்கையில் அரசியல் வலுவுகள் சில நேரங்களில் குற்றவாளிகளை பாதுகாக்கும் நிலையில் இருந்தபோதிலும், இந்த கைது சம்பவம் நீதியின் சுயாதீனத்திற்கும், சட்டத்தின் உயர் நிலைக்கும் ஒரு சின்னமாக அமைந்துள்ளது.

இனியபாரதி யார்? அவர், ரிஎம்விபி எனும் பில்லையன் குழுவின் முக்கிய உறுப்பினர். இக்குழு தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து பிரிந்து அரசாங்கத்துடன் இணைந்து இயங்கியதிலிருந்து பல்வேறு குற்றச்சம்பவங்களில் சிக்கிக்கொண்டுள்ளது. அந்த காலகட்டத்தில் கிழக்கு மாகாணத்தில்அச்சமூட்டல், கடத்தல், அழிப்புபோன்றவற்றில் குற்றச்சாட்டு நிலவியது.

இந்தச் சம்பவம் உண்மையில் சட்டத்தின் முன்னிலை மீண்டும் வலுவடைகிறதா? அல்லது, பழைய அரசியல் கணக்குச்சரிக்கையா என்பதற்கான கேள்விகளும் எழுகின்றன. ஆனால், உண்மை என்னவெனில், ஒரு ஜனநாயகத்தில் யார் தான் எந்தக் கட்சியிலே இருந்தாலும், குற்றச்சாட்டுகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சட்டத்தின் கீழ் யாரும் மேலல்ல. இந்த நெறிமுறையை நிலைநாட்டும் வகையில் இந்த கைது நடவடிக்கை நடைபெற்றிருக்கிறது என்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

இதற்குப்பிறகுஎதிர்பார்க்கவேண்டியஒன்றுஎன்னவெனில், இந்த விசாரணை நிராகரிக்கப்பட்டு விடாமல், அதற்கான சட்ட நடவடிக்கைகள் முறையாக முன்னெடுக்கப்பட வேண்டும். நீதிமன்றங்களின் நேர்மையும், சாட்சிகளின் பாதுகாப்பும், வழக்கின் துல்லிய முறையும் உறுதி செய்யப்பட வேண்டும். இதனால் மட்டுமே, இக்குற்றச்சம்பவங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும்.

இதேபோல், இனியபாரதி மற்றும் அவருடைய குழுவினர் மட்டுமன்றி, கடந்த சில ஆண்டுகளில் இதேபோன்ற குற்றங்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் மற்ற அரசியல் சார்ந்த குழுக்களும்விசாரணைக்குஉட்படுத்தப்படவேண்டும். 'நாளையநல்லாட்சி' என்பதுபழைய குற்றங்களையும்மறந்து விடுவதில் அல்ல; அதனை எதிர்நோக்கி, உரியவிதத்தில் தீர்க்கும் நீதிச் செயல்பாடுகளில்தான் உள்ளது.

முடிவில், இந்த கைது வெறும் இரண்டு நபர்களின் சட்டவழி நிகழ்வாக மட்டுமல்ல; இது, பல ஆண்டுகளாக நீதிக்காக காத்திருக்கும் பொதுமக்களுக்கான ஒரு விடியலான செய்தியாக இருக்கலாம். கடந்த காலத்தில் சாய்ந்த வன்முறைகள் இனிமேலும் நடக்காது என்ற நம்பிக்கையை உருவாக்க, இந்த நடவடிக்கைகள் தொடர வேண்டும்.

இது, ஒரு புதிய இலங்கையை நோக்கிச் செல்லும் திருப்புமுனையாக அமைய வேண்டியது அவசியம்.

# சீதாவத்தை சபையின் வழக்கு நாளை நீதிமன்றில் பரிசீலனை

சீதாவக்கை பிரதேச சபையின் தலைவர் மற்றும் பிரதித்தலைவரை தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பை நடத்துவதைத் தடுக்கும் வகையில் மேல்மாகாண ஆணையருக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு தாக்கல் செய்யப்பட்ட மனுவை நாளையதினம்(9)பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது.

இந்த மனு நேற்று(07) மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி ரோஹந்த அபேசூரிய மற்றும் நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ

ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி குழாம் முன்னிலையில் அழைக்கப்பட்டது. இதன்போது இந்த உத்தரவை நீதிபதிகள் குழாம் பிறப்பித்தது.

இதன்போதுஇந்தமனுவின்பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மேல் மாகாண ஆணையாளர் சார்பில் மன்றில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெரனல் சுமதி தர்மவர்தன, இந்த மனு தொடர்பில் தனது சேவை பொருநர்கள் வரையறுக்கப்பட்ட ஆட்சேபனைகளை முன்வைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

சீதாவக்கை பிரதேச சபையின் தலைவர் மற்றும் பிரதித்தலைவரை தெரிவு செய்வது தொடர்பில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தின்

அறிக்கை மற்றும் குரல் பதிவுகளை ஆட்சேபனை களுடன் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுட்டிக்காட்டினார்.

மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி மன்றில் விடயங்களை முன்வைத்து, குறித்த ஆட்சேபனைகள் தொடர்பாக

தாம் பிரதிவாதங்களை முன்வைக்க தனக்கு சந்தர்ப்பம் வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.

மதுகம பிரதேச சபைக்கான இரகசிய வாக்கெடுப்பை நடத்துவதற்கு பொறுப்பான தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சட்டத்தரணி, அதனுடன் தொடர்புடைய குறிப்புகளை மன்றில் கோரிக்கை விடுத்தார். இதற்கமைய மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் குறித்த குறிப்புகள் மன்றில் சமர்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

மேலும் சீதாவக்கை பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட உறுப்பினர்களின் சார்பில் சட்டத்தரணி சாமர நாணயக்கார மற்றும் ஜனாதிபதி நிகல் ஹட்ச் விடயங்களை முன்வைத்து, இந்த மனு மீதான ஆட்சேபனைகளை முன்வைக்க தமக்கு கால அவகாசம் வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதற்கமைய இந்த மனுவை நாளைய தினம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழாம் உத்தரவு பிறப்பித்தது.

இந்த மனு குறித்த பிரதேச சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சியின் உறுப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் மேல் மாகாண தேர்தல் ஆணையாளர் சாரங்கிகா ஜெயசுந்தர உள்ளிட்ட தரப்பினர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

சீதாவக்கை பிரதேச சபையில் எதிர்க்கட்சியே பெரும்பான்மை பலத்தை கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள மனுதாரர்கள்,

சம்பந்தப்பட்ட பிரதேச சபையின் தலைவர் மற்றும் பிரதித்தலைவரைத் தெரிவு செய்வதற்காகமேல்மாகாணசபைஆணையர் சாரங்கிகா ஜெயசுந்தர தலைமையில் கடந்த 17 ஆம் திகதி ஒரு கூட்டமொன்று நடத்துப்பட்டதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன்போது மேல் மாகாண ஆணையாளர் இரகசி வாக்கெடுப்பை நடத்த தீர்மானித்ததாகவும்எனினும்இதற்குஎதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் 24 பேர் சபையில் இருந்து வெளிநடப்பு செய்ததாகவும் மனுதாரர்கள் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர்.இதையடுத்து சபை ஒத்தி வைக்கப்பட்டதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதற்கமைய மேல் மாகாண ஆணையர் சீதாவக்கை பிரதேச சபையின் தலைவர் மற்றும் பிரதித்தலைவரை தெரிவு செய்வதற்கு

இரகசிய வாக்கெடுப்பு நடத்த எடுத்த தீர்மானம் சட்டத்திற்கு முரணானது எனவும் அந்த தீர்மானத்தை செயல்படுத்துவதைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் தமது மனுவில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# புதிய தூதர் நியமனம்

இலங்கைக்கான புதிய அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராக மெத்தியூ டக்வேர்த் நியமிக்கப்பட்டிருப்பதாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் பெனி வொங் தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி வடகிழக்கு இந்து சமுத்திரப்பிராந்தியத்தில்அவுஸ்திரேலியாவின் மிகமுக்கிய பங்காளியாக இலங்கை திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நல்லுறவு என்பது வலுவான பரஸ்பர சமூகத்தொடர்புகள், நீண்டகால அபிவிருத்திப் பங்காண்மை, அதிகரித்துவரும் வர்த்தக மற்றும் முதலீட்டுத் தொடர்புகள், அமைதியானதும் நிலையானதும் சுபீட்சமானதுமான இந்து சமுத்திரப்பிராந்தியத்தை உறுதிசெய்வதில் இருநாடுகளும் கொண்டிருக்கும் அர்ப்பணிப்புடன்கூடிய கடப்பாடு என்பவற்றின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது' எனவும் பெனி வொங் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு அவுஸ்திரேலியாவில் வாழும் சுமார் 160,000 க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவின் பல்கலாசார சமூகத்துக்கு பெறுமதிவாய்ந்த பங்களிப்பை வழங்கிவருவதாகவும் அவர் பாராட்டு வெளியிட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீஃபென்ஸின் பதவிக்காலம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துடன் முடிவுக்குவரவுள்ள நிலையில், அவுஸ்திரேலிய வெளிவிவகார மற்றும் வர்த்தகத் திணைக்களத்தில் பணியாற்றிய நீண்டகால அனுபவமுடைய இராஜதந்திரி மெத்தியூ டக்வேர்த் புதிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் அவர் இந்தோனேசியா மற்றும்கம்போடியாகஆகிய நாடுகளுக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராகப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு
கற்பகவனம்
செயற்றிட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical
University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDr
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.07.2025இல் வெளியிடப்பெற்றது